10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 88 சனிக்கிழமை ஓகஸ்ட் 12 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## “நீதம்” நூல் வெளியீட்டு

யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களின் ஏற்பாட்டில் “நீதம்” நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்க உப தலைவர் சாந்தா அபிமன்ன சிங்கம், யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஆர்.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கே.சுதாகர் ஆகியோர்

06

## பல்கலைக்கழகத்துக்குள் விசேட அதிரடிப்படை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் பொலிஸாரும்விசேட அதிரடிப்படையினரும் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. யாழ். பல்கலைக்கழக சட்டதுறை மாணவர்களால் வெளியிடப்பட்ட ‘நீதம்’ நூல் வெளியீட்டு விழாவுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் வருகைதந்திருந்தார். அவரது பாதுகாப்புக்காக வாகனங்களில் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்த பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் கைலாசபதி கலையரங்கினுள்ளும் பாதுகாப்பில்

06






# உன்னிகிருஷ்ணனின் இன்னிசை திடீர் ரத்து!

## ஈ.பி.டி.பி. எதிர்ப்பே காரணமா?

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவிருந்த தென்னிந்தியத் திரைப்பட பின்னணிப் பாடகர் உன்னிகிருஷ்ணனின் “இன்னிசை பாடிவரும்” இசை நிகழ்வு திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களின் எதிர்ப்பே இசை நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. எனினும் நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் மறு அறிவித்தல்வரை இரத்துச் செய்வதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த இசை நிகழ்வு இன்று மாலை ஆறு மணிக்கு யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி மைதானத்தில் நடைபெறவிருந்

06

## விரும்பினால் தவராசா பதவி விலகட்டும்

தமிழ் மக்களின் இன்றைய நல்வாழ்வுக்காக உருவாக்கப்பட்ட வட மாகாணசபை ஆட்சியை கலைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கூறுவதை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார். இன்றைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து யாழ். ஊடக அமையத்தில் கருத்துத் தெரிவிக்கும் பொழுதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு குறிப்பிட்ட அவர்,

வட மாகாண சபையை கலைக்க வேண்டும் என்று கூறுகின்ற வடக்கு

06

## மனோ எதிர்ப்பு

“20ஆம் திருத்தச் சட்ட யோசனையைக் கைவிட வேண்டும் என்றும், தேர்தல்கள் ஒத்திவைக்கப்படாமல் நடத்தப்பட வேண்டும் என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எடுத்துள்ள முடிவுகளை நாம் வரவேற்கிறோம்” என, ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் ,

“இந்த தேர்தல் ஒத்திவைப்பு அவசியமற்றது. இது நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். அதைவிட புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரலாம். அதற்கு இன்னும் சிறிது காலம் எடுக்கும்.

06




## காணாமல் போனோர் உறவினரைச் சந்தித்தார் சிவாஜி

வவுனியாவில் சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் குடும்பத்தினரை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சந்தித்துக் கலந்துரையாடினார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தாம் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினருக்கு எடுத்துக் கூறியுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர் சுமார் 170 ஆவது நாளாக வவுனியாவில் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். (எ)

## டெனீஸ்வரன் தொடர்பில் முக்கிய முடிவு

### ரெலோ இன்று அறிவிக்கும்

வடமாகாணப் போக்குவரத்து அமைச்சுக்குப் புதிய உறுப்பினரொருவரை நியமிப்பது மற்றும் தற்போதைய அரசியல் நிலை தொடர்பான ரெலோவின் தலைமைக்குழுக் கூட்டமொன்று வவுனியாவில் நடைபெற்று வருகிறது. குறித்த கூட்டம் வவுனியாவிலுள்ள ரெலோ அலுவலகத்தில், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், ரெலோவின் தலைமைக்குழுக் கூட்டத்தை நீண்ட காலமாக புறக்கணித்து வந்த வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இன்று நடைபெற்று வருகின்ற கூட்டத்துக்கு வருகை தந்துள்ளார். இது தொடர்பில் எதிரொலிக்குத் தெரிவித்த வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், கூட்டத்தின் காலை அமர்வு நண்பகலுடன் நிறைவுபெற்றது. காலையில் ரெலோ

06

## ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

ஆரம்பம் 23.08.2017 புதன்கிழமை

- ஆஸ்திரேலியா சென்று தொழில்புரிய ஆசையா?
- சட்டபூர்வமாகச் செல்லும் வழி தெரியவில்லையா?
- கவலையை விடுங்கள்
- உங்களுக்கு வழிகாட்டுகிறது இந்தக் கருத்தரங்கு
- 30 பேருக்கு மட்டுமே சந்தர்ப்பம்

நேரம்: 7.00 p.m.- 8.30 p.m

அனுமதி இலவசம்

Website : www.sanjicaldera.com

MIA MEMBER OF MIGRATION INSTITUTE OF AUSTRALIA
Migration Agent Registration No: 0635492 ABN: 49501648127

ஜெட்வின் ஹோட்டல், மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.

முற்பதிவுகளுக்கு முந்துங்கள் பதிவு - 6.15 p.m - 6.45 p.m

தொடர்புகளுக்கு: 076 601 3381, 077 889 7853

# "எமது கிராமத்தையும், மக்களையும் நாங்களே பாதுகாக்க வேண்டும்"

வவுனியாவில் பல்வேறு தரப்பி னரால் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் வார இறுதி நாட்களில் மும்முரமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இந்நிலையில் பண்டாரிக் குளத்தில் பிரஜைகள் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று காலை 8.30 மணியளவில் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

"எமது கிராமத்தையும், மக்க ளையும் நாங்களே பாதுகாக்க வேண்டும்" எனக் குறிப்பிட் டுள்ள பிரஜைகள் குழுவினர்,



சுற்றாடலில் நீர் தேங்கி நிற்காத வண்ணம் சுத்தம் செய்வதோடு வீட்டில் தேங்கிக் கிடக்கும் தேவையற்ற பொருட்களை அகற்றி வேறுவேறாகப் பிரித்து அகற்றும் பணியினை இன்றும் நாளையும் மேற்கொள்ளவுள்ள தாகக் குறிப்பிட்டுள்ளனர். (உ)

# சிறையிலிருந்து பரீட்சை எழுதும் வாள்வெட்டு சந்தேக நபர்கள்

ஆவா குழுவைச் சேர்ந்தவர் கள் என சந்தேகிக்கப்படும் இரு வர் சிறைச்சாலையிலிருந்து கொண்டு உயர்தரப் பரீட்சைக் குத் தோற்றுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் அண்மையில் கைது செய்யப்பட்ட ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப் படும் இரண்டு பேர், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். யாழ்ப்பாணச் சிறைச்சாலை அதி காரிகளின் பாதுகாப்புடன் நேற்று இவர்கள் பரீட்சைக்குத் தோற்றி யுள்ளனர்.

கோப்பாயில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது வாள் வெட்டு நடத்திய குற்றச்சாட் டின் பேரில் கடந்த 9ஆம் திகதி கைதான இருவரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 19 மற்றும் 20 வயதான வர்களே இவ்வாறு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இருவரும் வணிகப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் எனத் தெரியவருகின்றது. (உ)

# இந்தியப் பிரஜைகள் மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த இந்தியப் பிரஜைகள் மூன்றுபேர் சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் பிரதேசங்க ளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இந்தியப் பிரஜைகள் நெல் அறு வடை செய்யும் இயந்திரத்தின் சாரதிகளாக பணியாற்றிக்கொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இன்று சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (உ)

# மகிந்த-சம்பந்தன் சந்திப்பால் தென்னிலங்கை அச்சம்

அண்மையில் நடைபெற்ற "தமிழ் வினைச்சொற்கள் விபரித்தல்" நூல் வெளியீட்டு நிகழ்வில் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்சவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் சந்தித்துக் கொண்டமை தென்னிலங்கையில் பல் வேறு தரப்பினர் மத்தியிலும் பீதியை உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

குறித்த நூல்வெளியீட்டில் இருவரும் கைகுலுக்கிக் கொண்டதோடு, அருகருகே இருந்து நீண்டநேரம் அளவளாவிக் கொண் டனர். அங்கு உரையாற்றிய இருவரது உரைகள் குறித்தும் கொழும்பு அரசியல் தரப்பினர் ஆராந்துள்ளதாகத் தெரியவரு கின்றது.

பிணை முறி மோசடி, ரவி கருணா நாயக்கவின் பதவி விலகல் ஆகியவற் றால் ஏற்பட்ட குழப்ப நிலைகளைய



டுத்து மகிந்தவுடன் இணைந்து ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றுக்கு சம்பந்தன் முனையக் கூடுமோ என்ற அச்சம் தோன்றியிருப்ப தாகத் தெரிவிக்கப்படுகின்றது. நூல் வெளி யீட்டில் உரையாற்றியிருந்த இரா.சம் பந்தன் முன்னாள் ஜனாதிபதியும் நானும் இணைந்து ஆட்சி புரிய வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். (எ)

# வவுனியாவில் வாளுடன் ஒருவர் கைது

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் வாளு டன் நின்ற ஒருவர் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஆவாக் குழுவுடன் தொடர்பா என்ற அடிப்படையில் பொலிஸார் தீவிர விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று மாலை இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா, தேக்கவத்தை 12 ஆம் ஒழுங்கையில் வசிக் கும் க.கனிஸ்டன் என்ற இரும்புவேலை செய்யும் 25 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு சந்தேகத்தில் கைது செய்யப்பட் டுள்ளார்.

இவரது வீட்டில் இருந்து வில்லுத்தகடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், 21.5 அங்குலமுடைய வாளொன்றும் மீட்கப்பட்டுள்ளது. (உ)

# தாதிய மாணவர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற் கான விண்ணப்பங்களை சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு கோரியுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு மக்களின் விகிதாசாரத்திற் கேற்ப பிரித்து ஒவ்வொரு மாவட்டத் துக்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய எண் ணிக்கை தீர்மானிக்கப்படவுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் 2015 அல்லது 2016 க.பொ.த. உயர்தரப் பரீட் சையின் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி 3 பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திய டைந்திருக்க வேண்டும்.

அத்துடன், விண்ணப்பதாரி 18 - 28 வயதுக்கு உட்பட்டவராகவும், திருமண மாகாதவராகவும் இருத்தல் அவசியம். விண்ணப்பக் கட்டணம் 300 ரூபா எனவும், ஒகஸ்ட் 31ஆம் திகதி விண்ணப்ப முடிவுத் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# யாழ் இளைஞன் சுவிஸில் ரயிலில் பாய்ந்து தற்கொலை

சுவிட்ஸர்லாந்தில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் தற்கொலை செய் துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

27 வயதான தயாகரன் கந்தசாமி என்பவர், ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். சுழிபுரம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தயா கரன், சுவிட்ஸர்லாந்தின் லுசர்ண் நகரில் வசித்துவந்துள்ளார்.

இந்நிலையில் ரயிலில் பாய்ந்து நேற்று முன்தினம் தற்கொலை செய்துள்ளார். தற்கொலைக்கான காரணம் இதுவரை வெளியாக வில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (உ)

# ரயில்வே அதிகாரிகள் வேலை நிறுத்தம்

மருதானை மற்றும் கொழும்புக் கோட்டை ரயில் நிலையங்களின் ரயில் பாது காப்பு அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று காலை 10 மணி முதல் அவர்கள் பணிப் புறக்க ணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என ரயில்வே பாதுகாப்பு அதிகா ரிகளின் சங்கம் கூறியுள்ளது (உ)


பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

மாலை நேரத்தில் வெளியாகும் 'எதிரொலி' பத்திரிகை விநியோகத்துக்கு ஒருவர் தேவை. சாரதி அனுமதிப்பத்திரமும் மோட்டார் சைக்கிளும் வைத்திருத்தல் அவசியம்.

தொடர்புகளுக்கு: 077 657 5907


# முன்பள்ளிக்கு தொலைக்காட்சி அன்பளிப்பு

புலோலி கந்தமுருகேஸ்வரர் முன்பள்ளி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி ஒன்று முன்பள்ளி நிர்வாகக் குழுவிடம் கைய ளிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப் பாளரும் வடமாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்தின் பன்முகப்படுத் தப்பட்ட நிதியின் கீழ் தொலைக்காட்சி வழங் கப்பட்டுள்ளது. தொலைக்காட்சியினை வழங் கும் நிகழ்வு வடமராட்சி வலயக் கல்விப் பணி மனையில் நடைபெற்றது. (உ-11)



# வாழைப்பழ மருத்துவம் அசரவைக்கும் இளைஞர்



இங்கிலாந்தைச் சேர்ந்த 21 வயதான டேன் நாஷ் என்ற இளைஞர் வாழைப் பழத்தை மட்டுமே தனது உணவாக உட்கொண்டு ஆரோக்கியத்துடன் அனைவரையும் ஆச்சரியப்பட வைத் துள்ளார். இவர் ஒரு வாரத்துக்கு 150 மஞ்சள் வாழைப்பழங்களைச் சாப்பிடு கிறார். மருத்துவர்கள் இது முறை யற்ற உணவுப் பழக்கம் என்று எச்சரித் தாலும் இவர் பொருட்படுத்தவில்லை.

"வாழைப்பழத்தை மட்டும் சாப்பிடுவ தால் என் உடல் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது. நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க வைக்கிறது. எனக்குச் சில உடல் நலப் பிரச்சினைகள் இருந்தன. முதலில் சைவ உணவுக்கு மாறினேன். அப்போ தும் என் பிரச்சினை சரியாகவில்லை. இறுதியில் வாழைப்பழ உணவு முறைக்கு மாறினேன். நம்மைத் தவிர மற்ற விலங்குகளும் பறவைகளும் இயற்கை யான உணவுகளை அப்படியே சாப்பிடு கின்றன. நாம் மட்டும்தான் சமைத்து உண்கிறோம். அதனால் சமைக்கப்படாத இயற்கையான உணவு முறைக்கு மாறிவிட்டேன். காலையில் 12 வாழைப்பழங்களுடன் கீரைகளைச் சேர்த்து அரைத்து, குடித்துவிடுவேன். மதியம் 8 வாழைப்பழங்களுடன் வேறு சில பழங்களைச் சேர்த்து அரைத்து, குடிப்பேன். மாலையில் வாழைப்பழங்களுடன் பருப்புகள், உலர் பழங்களைச் சேர்த்துச் சாப்பிடுவேன். இதனால் என் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைத்து விடுகின்றன. இப்போது எனக்கு எந்த உடல்நலக் கோளாறும் இல்லை. வாழைப்பழம் ஆண்டு முழுவதும் கிடைக் கக்கூடியது. விலையும் குறைவானது. அதிக சத்துகளும் நிறைந்தது. இந்த உணவுப் பழக்கத்தை யாருக்கும் பரிந்து ரைக்க மாட்டேன். எனக்கு இது ஒத்து வருகிறது" என்கிறார் டேன் நாஷ்.(இ)

## போர்ப் பயிற்சியில் அமெரிக்கா!



அமெரிக்காவின் குவாம் தீவை தாக்க வடகொரியா திட்டமிட்டுள்ளதைத் தொடர்ந்து , வடகொரியாவுக்கு எதி ராகப் போர் தொடுக்க அமெரிக்காவும், தென்கொரியாவும் பயிற்சியில் ஈடுபட இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

வடகொரியாவுக்கு எதிரான இந்தப் போர் பயிற்சிகள் ஒகஸ்ட் 21 - 31 வரை நடைபெறவுள்ளதாகவும், இதில்10,000க்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினரு டன் தென்கொரியப் படையினரும் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தப் பயிற்சிகள் வடகொரியாவின் தாக் குதலைச் சமாளிப்பதற்கான இயற்கை யான தற்காப்பு முறை மட்டுமே என்று அமெரிக்கா மற்றும் தென் கொரியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்தப் போர்ப் பயிற்சிகள் வடகொரியாவைச் சீண்டும் நடவடிக் கையே என சீனா, ரஷ்யா போன்ற நாடு கள் கருத்து வெளியிட்டுள்ளன. (இ)

## சுரங்கத்தில் விபத்து 36 பேர் பரிதாபப் பலி

சீனாவின் சான்சி மாகாணத்தில் சுரங் கப் பாதைச் சுவரின்மீது பஸ் மோதிய தில் 36 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

சான்சி மாகாணத்தின் தலைநகரான சியான் கன்சாங் நான்குவழிச் சாலை யில் உள்ள குயின்லிங் சுரங்கப்பாதை வழியாகக் குறித்த பஸ் சென்றபோது, இரவு 11.30 மணியளவில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, சுரங்கப் பாதைச் சுவரின் மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 36 பேர் பரிதா பமாகப் பலியாகினர்.

படுகாயமடைந்த 13 பேர் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

# 300 பெண்களை வன்புணர்ந்த கும்பல்



பிரிட்டனில் சிறுமிகள் உட்பட 300 பெண்களை கூட்டாக வன் புணர்ந்த 18 பேர் கொண்ட கும்ப லுக்கு 300 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2011 முதல் 2014 வரை, நியூ கேசல் மற்றும் கேட்ஸ்ஹெட் ஆகிய நகர்களைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி கள்முதல் 25 வயதுடைய இளம்பெண் கள் வரை இந்தக் கும்பல் கடத்திச் சென்று வன்புணர்ந்துள்ளனர்.

ஒரு பெண் மற்றும் 17 ஆண்களைக் கொண்ட இந்தக் கும்பலைச் சேர்ந் தவர்கள், இலவசமாக மது, போதை மருந்து தருகிறோம் என ஆசை வார்த்தை கூறி பெண்களைக் காரில் கடத்திச் சென்றுள்ளனர்.பின்னர், அவர்களுக்குப் போதை மருந்து கொடுத்து மயங்க வைத்து வன் புணர்ந்துள்ளனர்.இவ்வாறு இந்தக் கும்பலால் இதுவரை 300க்கும் அதிகமான பெண்கள் வன்புணரப் பட்ட விசாரணையில் தெரியவந் துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்கள் பேசிய போது, 'எங்களை வன்புணர்ந்த கும்பலில் பாகிஸ்தான், பங்களா தேஷ், இந்தியா, ஈராக் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் அதிகமாக இருந்தனர்' என வாக்கு மூலம் அளித்தனர்.

இதனையடுத்து சிறப்புப் படையை உருவாக்கிய பொலிஸார் கடுமையான விசாரணைக்கு பின்னர் 18 பேரையும் கைது செய்தனர்.

பிரிட்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இவ்வழக்கின் இறுதி விசாரணை நேற்று நீதிமன்றத்தில் நடந்தது. இதில் 18 குற்றவாளிக ளுக்கும் ஒட்டுமொத்தமாக 300 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (இ)

# ஐ.எஸ்.க்கு ஆயுதங்கள் விற்கிறதா வடகொரியா?

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு வெடிகுண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் போன்றவை களை வடகொரியா விற் பனை செய்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

வடகொரியா தொடர்ந்து கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோத னைகளை மேற்கொண்டு வருவதால், அமெரிக்கா வின் தூண்டுதலால் ஐ.நா. பாதுகாப்புச் சபை வடகொரியா மீது புதிய பொருளாதாரத் தடை விதித்தது.

இந்தப் புதிய பொருளா தாரத் தடையினால் வட கொரியாவின் நிலக்கரி, இரும்பு, இரும்புத் தாது, லெட், லெட் தாது மற்றும் கடல் உணவு உள்ளிட்ட வற்றின் ஏற்றுமதி பாதிக் கப்படும்.

அதுமட்டுமல்லாமல் வங் கிகள், வெளிநாட்டு நிறு வனங்களுடனான கூட்டுச் செயற்பாடு ஆகியவற்றி லும் பாதிப்பு ஏற்படும் என வும் வடகொரியாவின் வரு வாயில் ஒரு பில்லியன் அமெ ரிக்க டொலர் அளவுக்கு இழப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வட கொரியா பற்றி அமெரிக் காவின் 'கலோரின்' என்ற அமைப்பு பகீர் தகவல் ஒன்றைத் தெரிவித்துள்ளது. அதில், "நாங்கள் தீவிரவா திகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். தீவிரவாதிகளுக்கு வட கொரியா வெடிகுண்டுகள், ஏவுகணைகள் மற்றும் துப்பாக்கிகள் போன்ற வற்றை விற்பனை செய்து வருகின்றது" எனக் கூறி யுள்ளது. ஐ.எஸ் க்கு ஆயு தங்களை விற்பனை செய் வதாகக் குற்றம் சாட்டி, வடகொரியா மீது போர் தொடுக்கவே அமெரிக்கா இப்படிச் செய்வதாக வட கொரியா கூறியுள்ளது.(இ)



## சிறைக்குள் இறங்கிய ஹெலி



பங்களாதேஷில் உயர் பாதுகாப்பில் உள்ள சிறைச்சாலையில் ஹெலிகொப் டர் ஒன்று திடீரென்று தரையிறங்கிய தால் பதற்றம் ஏற்பட்டது.

குறித்த சிறைச்சாலை மீது தாக்குதல் நடத்தி கைதிகளை விடுவிக்கத் தீவிரவாதி கள் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் ஹெலிகொப்டர் சிறை வளாகத்தினுள் தரையிறங்கியதால் உடனடியாக பொலிஸார் களத்தில் குதித்தனர்.

ஆயினும் மலேசியாவிலிருந்து திருமணம் ஒன்றில் பங்கேற்பதற்காக, தனியார் ஹெலிகொப்டரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் வந்த போதே, அந்தக் ஹெலிகொப்டர் தவறுதலாகச் சிறை வளாகத்தில் தரையிறக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, குறித்த ஹெலிகொப்டரை வாடகைக்கு வழங்கிய நிறுவனம் பங்களாதேஷ் அர சிடம் மன்னிப்புக் கோரியுள்ளது. (இ)

# விவசாயிகளைச் சந்தித்த எடப்பாடி



டெல்லியில் போராட்டம் நடத்திவரும் தமிழக விவசாயிகள், தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்தனர்.

முதலமைச்சர் பழனிசாமி, குடியரசு துணைத் தலைவர் பதவி ஏற்பு விழாவில் கலந்துகொள் வதற்கு முன்னதாக இந்தச்சந்திப்பு நடைபெற்றது.

விவசாயக் கடன் தள்ளுபடி, நதிகள் இணைப்பு, கூடுதல் வறட்சிக்கான நிதி என்பன உட்படப் பல்வேறு கோரிக்கைகளுடன் தமிழக விவசா யிகள் டெல்லியில் போராடி வருகின்றனர்.

கடந்த ஜூலை 16ஆம் திகதி முதல் நடை பெற்று வரும் இந்தப் போராட்டம், பி.அய் யாகண்ணு தலைமையிலான தேசிய தென் இந்திய நதிகள் இணைப்பு சங்கம் சார்பில் இரண்டாம் கட்டமாகத் தொடங்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில் தமிழக முதலமைச்சரைச் சந்தித் தமை தொடர்பில் அய்யாகண்ணு கூறுகையில், எங்கள் கோரிக்கைகள் குறித்து பிரதமர் நரேந் திர மோடியைச் சந்திக்கும் போது வலியுறுத்து வதாக முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். மருதை ஆற்றில் அணை கட்டி, அதன்மூலமாகக் கரை வெட்டிப் பறவைகள் சரணாலயத்தை இணைக்கும் திட்டம் மற்றும் விருதுநகர் மாவட்ட திருச்சுழியின் குண்டாறு திட்டமும் அமல்படுத்தப்படும் என்றும் முதல்வர் உறுதி அளித்தார்" எனத் தெரிவித்தார். (இ)




# கபடிச் சம்பியனானது பலாலி விண்மீன்

வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன், அமரர் ம.சூரிய குமாரன் ஞாபகார்த்தமாக பருத்தித் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திவந்த கபடித் தொடரில் சம் பியனானது பலாலி விண்மீன் அணி.

20 வயதுக்கு உட்பட்டோருக்கான யாழ். மாவட்டக் கழகங்களுக்கிடை யிலான இந்தத் தொடரின் இறுதி யாட்டம் நேற்று இரவு 7.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் பலாலி விண் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டியின் ஆரம்பம் முதலே விண்மீனின் ஆதிக்கமே மேலோங்கி யிருந்தது. நிதானமாக விளையாடிய பலாலி விண்மீன் வீரர்களின் அதிரடி யால் நிலைகுலைந்த எதிரணியினரால் புள்ளிகளை வேகமாகப் பெறமுடிய வில்லை.

இதன் விளைவாக ஆட்டத்தின் நிறைவில் 41:32 என்ற புள்ளிகளடிப் படையில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றது பலாலி விண்மீன் அணி. ஆட்டத்தின் நாயகனாக பலாலி விண்மீன் வீரர் சாந்தன் தெரிவுசெய் யப்பட்டார். (ஐ)



# தடை நீங்காது

இந்தியக் கிரிக்கெட் வீரரான ஸ்ரீசாந்த் மீதான தடை யை நீக்க வேண்டும் என்று கேரள மாநில உயர்நீதிமன் றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து இந்தியக் கிரிக்கெட் சபை மேல்முறையீடு செய்யவிருக்கிறது.

இந்திய அணியில் இடம்பிடித்திருந்தவர் கேரளா வைச் சேர்ந்த ஸ்ரீசாந்த். 2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரின் போது ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டார் என்ற புகார் எழுந்தது. இதுகுறித்த விசார ணையின் பின்னர் இந்தியக் கிரிக்கெட் சபை ஸ்ரீசாந்த் துக்கு வாழ்நாள் தடைவிதித்தது.

எனினும், டில்லி நீதிமன்றில் நடைபெற்ற வழக்கிலி ருந்து ஸ்ரீசாந்த் விடுவிக்கப்பட்டார். இருந்தாலும் அவர் மீதான வாழ்நாள் தடையை நீக்க இயலாது என்று கிரிக் கெட் சபை கூறிவிட்டது.

இதனால் ஸ்ரீசாந்த், தன் மீதான தடையை எதிர்த்து கேரள உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், ஸ்ரீசாந்த் மீதான தடையை நீக்குமாறு கிரிக்கெட் சபைக்கு உத்தரவிட்டது.

எனினும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து இந்தியக் கிரிக் கெட் சபை சார்பில் மேல்முறையீடு செய்யப்படவுள் ளது. இந்தத் தகவலை கிரிக்கெட் சபையின் உயர் அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், "நீதிமன்றின் உத்தரவை எங்களால் ஏற்றுக்கொள்ள இயலாது. இதை எதிர்த்து மேல்முறையீடு செய்வது முக்கியமானது. இன்னும் ஒரு வாரத்துக்குள் கேரள நீதிமன்றல் மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப் படும்"- என்றார். (ஐ)

# ஓவியா ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி



'பிக்பாஸ்' நிகழ்ச்சியிலிருந்து சில காரணங் களால் ஓவியா வெளியேற்றப்பட்டாலும் மீண்டும் அவர் 'வைல்ட் காட்' மூலம் நிகழ்ச சிக்கு வர வேண்டும் என்பது ரசிகர்களின் பேராசை.

இந்நிலையில் ஓவியா தெலுங்கில் நடித் திருக்கும் Idi Naa Love Story என்ற படம் எதிர்வரும் 18ஆம் திகதி வெளியாகவுள்ளது.

'பிக்பாஸ்' நிகழ்சிக்குப் பிறகு ஓவியா நடிப் பில் படம் வெளியாகவிருப்பதால் ரசிகர் கள் படத்துக்குப் பெரும் வரவேற்புக் கொடுப் பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ஒ)

# உற்சாகப்படுத்துதல்



இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பித்துள் ளது.


ஏற்கனவே, சொந்த மண்ணில் தொடரை இழந்துள்ள இலங்கை அணி, கடைசி டெஸ்ட் போட் டியை வெற்றியுடன்முடிக்கும்முயற் சியில் உள்ளது.

கடந்த சில மாதங்களாகவே இலங்கை அணி அடி மேல் அடிவாங்கிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இலங்கைக் கிரிக் கெட் சபை போட்டியின் இடை வேளையின்போது வீரர்களுக்கு தண்ணீர் கொடுக்க பெண்களைப் பயன்படுத்தியமை சர்ச்சையாகியது.

எனினும், "ஏற்கனவே பலத்த காயத்திலிருக்கும் இலங்கை அணியை உற்சாகமாக இருக்க வைக்க இம்முயற்சி மேற்கொள்ளப் பட்டது என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். அதாவது மைதா னம் பார்ப்பதற்கு அழகாக இருக்க வேண்டும். இதன் காரணமா கவே இது போன்ற முயற்சியில் இறங்கியுள்ளோம்" என அதிகாரி கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இவரை வைச்சு செய்யவேணும்



பிக்பாஸ் நிகழ்ச்சியிலி ருந்து இந்த வாரம் ரசி கர்கள் அனைவரும் காயத்திரியைத்தான் குறிவைத்திருந்தனர்.

இதனால் இந்த வாரம் காயத்திரி நிச்சயம் செல்வார் என ரசிகர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். இந்நிலையில் நேற்று 'பிக்பாஸ்', ஒவ்வொ ருவரிடம் கேள்விகள் கேட்டார். இதில் காயத்திரி அனைத் துக்கும் சரியாக பதில் சொன்னமையால், அவரை வெளி யேற்றுவதிலிருந்து காப்பாற்றிவிட்டார்.

இதனால், காயத்திரிக்கு ஆதரவாக 'பிக்பாஸ்' செயற் படுகிறது என இருந்த குற்றச்சாட்டு தற்போது உறுதியாகி யுள்ளதாக இணையவாசிகள் கொந்தளித்துள்ளனர்.

எனினும், முன்னர் காயத்திரி, ஜூலியை இங்கிருந்து வெளியேற்றாமல் "வைச்சுச் செய்ய வேணும்" என்று கூறி யதுபோல, இம்முறை அவருக்கு ஆதரவாக இருக்கும் சக்தி வெளியேறும் வாய்ப்பு உள்ளது. இதனால், ஏனைய வர்கள் காயத்திரியை வைச்சுச் செய்வதற்கான வாய்ப்பு அதிகம் என்றும் மறுபுறம் குதூகலிக்கின்றனர். (ஒ)

# "யாழின் வல்லரசன் யார்": அரையிறுதியாட்டங்கள் நாளை


மத்திய விளையாட்டுக்கழகம்


இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம்


புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம்


யாழ். பல்கலைக்கழகம்

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம், ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அனுசரணையுடன் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் "2017இன் வல்லரசன் யார்" கரப்பந் தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங் கள் நாளை நடைபெறவுள்ளன.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் இந்த அரையி றுதியாட்டங்களின் முதலாவது போட்டி நாளை மாலை 4.30 மணிக்கு ஆரம்பிக் கும். இந்தப் போட்டியில் யாழ். பல்கலைக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளை யாட்டுக் கழகம் மோதும். இந்தப் போட்டி யைத் தொடர்ந்து நடைபெறும் இரண்டா வது போட்டியில்ஆவரங்கால்கழகங்களான இந்து இளைஞர் மற்றும் மத்தி மோதவுள்ளன.

## பர்தாவுக்கு தடை

இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற கல்வி பொதுத் தராதர உயர்தரத் தேர்வில் தோன்றும் முஸ்லிம் மாணவிகள், தங்கள் சீருடையான பர்தாவுடன் தேர்வு எழுதுவதற்கு ஒரு சில தேர்வு மையங்களில் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாக புகார்கள் எழுந்துள்ளன. இலத்திரனியல் உபகரணங்கள் பர்தாவுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டு, பர்தாவைக் கழற்றி விட்டுத் தேர்வு எழுதுமாறு மாணவிகள் குறிப்பிட்ட சில தேர்வு மையங்களில் பணிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. கண்டி மாவட்டம் கம்பகா பிரதேசத்திலுள்ள மூன்று தேர்வு மையங்களில் பர்தா அணிந்து தேர்வு எழுத ஆரம்ப நாட்களில் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாக மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் தெரிவித்துள்ளார். கல்வி இராஜங்க அமைச்சர் வி.ராதாகிருஷ்ணன், மாகாண மற்றும் வலய கல்வி இயக்குநர்கள் ஆகியோரின் கவனத்துக்கு இந்த விவகாரம் கொண்டு வரப்பட்டு, தீர்வு காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

### எம்.பிக்கள் தமிழ் கற்பது காலத்தின் தேவை


நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மொழியை கற்பது காலத்தின் காலத்துக்கு ஏற்ற தேவை என்று சபாநாயகர் கருஜயசூரிய கூறியுள்ளார்.
இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை கட்டியெழுப்புதல் போன்றே நாட்டின் அபிவிருத்திக்கும் அது தேவையானது என்று அவர் கூறியுள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ்மொழி பாடநெறியை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சபாநாயகர் இதனைக் கூறினார்.
இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் உரையாற்றும் போது, மொழிப் பிரச்சினையை தீர்ப்பதன் ஊடாக தேசிய பிரச்சினையில் குறிப்படத்தக்க அளவு தீர்க்க முடியும் என்று கூறினார். (உ)



## 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவு இல்லை

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவின் தற்போதைய வடிவத்துக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு அளிக்காது என்று கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கும் இந்த திருத்தச் சட்டம் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சிறிலங்கா அரசாங்கம் பேச்சு நடத்தவில்லை. இது தொடர்பாக அரசாங்கத்துடன் எந்த இணக்கப்பாடும் ஏற்படுத்தப்படவில்லை. இந்த சட்டவரைவு தொடர்பாக குறிப்பிட்ட காலத்துக்குள் அரசியல் கட்சிகளுடன் தீவிரமான கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம், அரசாங்கம் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். ஏனைய கட்சிகளின் ஒப்புதலுடன், இந்த சட்டவரைவை அரசாங்கம் மீண்டும் அறிமுகப்படுத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஆதரவாக நிச்சயம் வாக்களிக்கும். மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்காக மாத்திரமே இந்த சட்டத் திருத்த வரைவைக் கொண்டு வருவதை ஏற்க முடியாது" என்றும் அவர் கூறினார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




## அமெரிக்கா ஆதரவளிக்கும்




புதிய அரசியலமைப்பை வரையும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அமெரிக்க அரசாங்கம் முழுமையான ஆதரவையும் வழங்கும் என்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் உறுதி அளித்துள்ளனர். குடியரசுக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்களான றொட்னி பிரீலிங்குசென், ஹென்றி கியூலர் ஆகியோர் சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இவர்கள் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அதன் பின்னராக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் அரசியலமைப்பு திருத்தம், நல்லிணக்கம், நீதி, பொருளாதார செழிப்பு போன்ற இலங்கையின் கடப்பாடுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று தெரிவித்துள்ளார். (உ)

## சேவை நீடிப்புக் கேட்கும் கடற்படைத் தளபதி



கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மேலும் ஆறு மாத சேவை நீடிப்பை வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன 55 வயதை எட்டியதையடுத்து, கடந்த பெப்ரவரி 22 ஆம் நாள் ஓய்வு பெறவிருந்தார். இதையடுத்து அவருக்கு ஜனாதிபதி ஆறுமாத சேவை நீடிப்பை வழங்கியிருந்தார். இந்தச் சேவை நீடிப்பு, வரும் ஒகஸ்ட் 22ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இந்த நிலையிலேயே மேலும் ஆறு மாதகால சேவை நீடிப்பைக் கோரியுள்ளார். வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு மீண்டும் ஆறு மாத கால சேவை நீடிப்பு அளிக்கப்பட்டால், றியல் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா மற்றும் சிறிமேவன் விஜேசிங்க ஆகியோர் கடற்படைத் தளபதி பதவியைப் பெறும் வாய்ப்பை, இழக்க நேரிடும் எனக் கூறப்படுகின்றது. (உ)

## லொத்தர் சபைகள் எனக்கு வேண்டாம்



வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்க திலக் மாரப்பன இணங்கியுள்ளதாகவும், எனினும், அவர் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பனவற்றைப் பொறுப்பேற்க மறுத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க அண்மையில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட போது, நிதியமைச்சின் பொறுப்பில் இருந்த லொத்தர் சபைகள், வெளிவிவகார அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டது. இந்த நிலையில் மத்திய வங்கி பிணை முறி சர்ச்சையை அடுத்து. வெளிவிவகார அமைச்சர் பதவியை விட்டு ரவி கருணாநாயக்க விலகியுள்ளார். இதையடுத்து மீண்டும் இந்த நிறுவனங்கள் நிதியமைச்சின் கீழ் கொண்டு வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக ரவி கருணாநாயக்கவின் மைத்துனர் றொமேஸ் ஜெயவர்த்தன இருப்பதுடன், தேசிய லொத்தர் சபை தலைவராக அவரது உறவினர் ஒருவரே பதவியில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நல்லூர் புத்தகத் திருவிழா





யாழ்.நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டும், இந்திய சுதந்திர தின 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டும், புத்தகத் திருவிழா நடைபெறுகின்றது. இந்தியத் துணைத்தூதரகமும், யாழ்.மாநகர சபையும் இணைந்து நடத்தும் 'புத்தகத் திருவிழா'வை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் நேற்று மாலை ஆரம்பித்து வைத்துள்ளார். இந்தப் புத்தகத் திருவிழா நல்லூரிலுள்ள யாழ்.மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் நடைபெற்றுவருகின்றது. இந்தப் புத்தகத் திருவிழா இன்றிலிருந்து எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முற்பகல் 10 மணி முதல் இரவு 10 மணி வரை இடம்பெறும். (உ-04)

## நாளை நாளும் கோளும்

13.08.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 28ஆம் நாள்
சஷ்டி மு.இ 08.26 வரை அச்சுவினி பி.இ. 04.41வரை மரணயோகம்
இராகுகாலம் 04.35-06.05 சுபநேரம் 09.05-10.35 எமகண்டம் 12.05-01.35

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யோகம் | சாந்தம் | உயர்வு | நற்செயல் | இன்பம் | உழைப்பு | சாதனை | முயற்சி | சுகம் | சுபம் | விருத்தி | உற்சாகம் |

எதிரொலி
Ethiroli

# அந்த நாள் ஞாபகம்.....!



## 2005 .08.12

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில், நீச்சல் தடாகத்தில் நீராடும் போது சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

# தனியார் காணிகளை கையகப்படுத்த முயற்சி



மட்டக்களப்பு, மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட ஆரையம்பதி கோவில் குளம் பகுதியிலுள்ள தனியார் காணியில், சிலரின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு, அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

குறித்த தனியார் காணிக்குள் தமக்கும் காணிகள் உள்ளதாகக் கூறிய சிலர், அங்கிருந்த வேலிகளை அகற்ற முற்பட்டபோது, அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததைய டுத்து, அவர்கள் அங்கிருந்து சென்ற னர். குறித்த பகுதி, சிலர் பரம்பரை யாக வாழ்ந்த பகுதியெனவும் சில ருக்கு 1973ஆம் ஆண்டு மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்ட காணியெனவும் அதற் கான உறுதிகள் உள்ளதாகவும் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், 2017ஆம் ஆண்டு எழுதப்பட்ட காணி உறுதிப்பத்திரங் களுடன் தமது காணிகளுக்குள் அத்து மீறி நுழைந்த சிலர், வேலிகளின் கட்டை களை கழற்றி அத்துமீறல்களை மேற் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை, சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்தி ரன், காணி உரிமையாளர்களுடன் கலந் துரையாடியதுடன், குறித்த பிரச்சினை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத் துக்குக் கொண்டுசெல்வதாகவும் தெரிவித்தார். (உ)

# ஊட்டச்சத்து உணவு வழங்கல்




கிளிநொச்சி – கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்தபுரம் கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சிக் கிளையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஊட்டச்சத்து கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யபட்ட திட்டப்பயனாளிகளுக்கு ஊட்டச் சத்து உணவுகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (உ–212)

# இராணுவத்துக்கு அடைக்கலம் தண்டனைக்குரிய குற்றம்

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மற்றும் விடுமுறை பெறாமல் கடமைக்குத் திரும்பாதிருக்கும் இராணுவ வீரர்களுக்கு பாதுகாப்பளிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று இராணுவத் தலைமையகம் கூறி யுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இரா ணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன இதனைக் கூறியுள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மற்றும் விடுமுறை பெறாமல் கடமைக்குத் திரும்பாதிருக்கும் இராணுவ வீரர்கள் பொய்யான தகவல்களை வழங்கி பல வேறு நிறுவனங்களில் பணி புரிந்து வருவதாக இராணுவப் பேச்சாளர் அந்த அறிக்கை மூலம் கூறியுள்ளார்.

இதுபோன்ற இராணுவ வீரர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது மற்றும் பாதுகாப்பு வழங்குவதானது நாட்டில் காணப்படுகின்ற சட்டத்தின்படி நீதிமன்றத்தால் தண்டனை பெறக் கூடிய குற்றமாகும் என்று பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன கூறியுள்ளார். (உ)

# மின்னொளியில் முன்பள்ளி விளையாட்டு விழா

சுன்னாகம் ஐயனார் சன சமூக நிலை யத்தின் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை ஐயனார் கோயில் வீதியில் மின் னொளியில் நடைபெறவுள்ளது.

ஐயனார் சன சமூக நிலையத் தலைவர் ர.யுகராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டு விழா, நாளை மாலை 4 மணிக்கு ஆரம்பித்து தொடர்ந்து இரவு மின்னொளியில் நடைபெறும். (ஒ)

# அபராதத் தொகை நியாயமற்றது



போக்குவரத்து விதி மீறலுக் கான அபராதத் தொகை அதிகரிக் கப்பட்டமை சில தரப்பினருக்கு நியாயமற்ற தாக்கத்தை ஏற்படுத் துவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள் ளார்.

முச்சக்கர வண்டிச் சாரதிகள் போன்றோருக்கு இதுபோன்ற அபராதம் விதிப்பது நியாயமற் றது என்று மகிந்த ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். (உ)

ஜெனரேட்டர் தேவை

அலுவலக கணினிகளுக்கு ஏற்றவகையில் மின்சாரம் பெறக்கூடிய, 4000 – 5000 வாட்ஸ் வலுவுடைய, பாவித்த சிறிய ரக ஜெனரேட்டர் ஒன்று தேவை.



தொடர்புகளுக்கு
077 657 5907

### டெனீஸ்வரன்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தின் வெளிநாட்டு கிளைகளின் பிரதிநிதிகளுடனான கலந்து ரையாடல் காலை நடைபெற்றது. ஏனைய முக்கிய விடயங்கள் தொடர் பில் கட்சியின் செயற்குழு இன்று மாலை ஆராயவுள்ளது. அதன் பின் னர் முக்கிய சில விடயங்கள் குறித்து அறிவிக்கப்படும் - என்றார். (எ)

### "நீதம்"...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டனர். "நீதம்" நூலினுடைய முதல் பிரதியை பிரதம விருந்தினர் மா.இளஞ்செழியன் பெற்றுக்கொண்டார். மேலும் சட்டத் துறையினரால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பாட சாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பதக்கங் களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (எ-16)

### விரும்பினால்..(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா வேண்டுமானால் தன்னுடைய எதிர்க்கட்சி தலைவர் பதவியை முதலில் இராஜினாமா செய்யவேண்டும். பதினாறாயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் போராளி களின் குடும்பத்தினர் வாழ்வாதார உதவிகள் தேவை என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். கடந்த 30வருட போராட்டத்தினால் பாதிக் கப்பட்ட போராளிகளும், பாதிக்கப்பட அனைத்து மக்களும் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு அவர்களது பொருளாதாரம் வளம் பெற நாம் அயராது பாடு படவேண்டும். இதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.- என்றார். (உ)

### பல்கலைக்..(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர். அண்மையில் நீதிபதி இளஞ்செழியன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதை அடுத்தே விசேட அதிரடிப்படையின ரின் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-16)

### உன்னிகிருஷ்ணனின்..(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது. ரிக்கெற் காட்சியாக நடைபெறவிருந்த குறித்த நிகழ்வில் உன்னிகிருஷ்ணனும் அவரின் மகள் உத்ரா உன்னி கிருஷ்ணனும் பாடவிருப்பதாக விளம்பரங்களில் அறி வித்தல் செய்யப்பட்டிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இசை நிகழ்வில் பங்கேற்க உன்னிகிருஷ்ணன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவ் இசை நிகழ்வு யாழ்ப்பாணம் சங்கிலியன் தோப்பில் நடைபெற்றிருந்தது. அப்போது ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அமைச்ச ராக இருந்தார். நிகழ்வின் மேடையில் உன்னிகிருஷ்ண னுக்கு பொன்னாடை போர்த்திய அவர் நினைவுப் பரி சும் வழங்கினார். அதற்கு புலம்பெயர் தமிழர்கள் மற் றும் தமிழகத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையில் டக்ளஸ் தேவானந்தாவின் கைகளால் கௌரவம் பெற்ற தற்காக வருத்தம் தெரிவிப்பதாக உன்னிகிருஷ்ணன் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இன்றைய நிகழ்வு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்ட உடனேயே ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி ஆதரவாளர்கள் எனக் கூறப்படுபவர்களால் குறித்த நிகழ்வுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டு வந்துள் ளது. இந்நிலையில் நேற்று இரவு யாழ். நகரப்பகுதி யெங்கும் உன்னிகிருஷ்ணனின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (எ)

### மனோ...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, உரிய வேளையில் சப்ரகமுவ, கிழக்கு, வட மத்திய மாகாணசபைகளின் தேர்தல்களை நடத்துவதே சாலச்சிறந்தது.இப்போது நடத்தப்படவுள்ள சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாணசபைகளின் தேர்தல்கள், மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் இப்போதும் நடைமுறையில் உள்ள பழைய விகிதாசார முறைமை யின் கீழேயே நடத்தப்பட வேண்டும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செய லாளர் மஹிந்த அமரவீரவுடன் இன்று காலை பேசியிருந் தேன். எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படும்" எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ)

### இசை நிகழ்ச்சி ரத்து

இன்று மாலை 6 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் மைதானத் தில் நடைபெறவிருந்த உன்னிகிருஷ்ணன் – உத்ரா உன்னி கிருஷ்ணனின் இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தி னால் பிற்போடப்பட்டுள்ளது என நிகழ்ச்சி ஒருங்கிணைப் பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 12.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.